# மேல்மாகாணக் கல்வித் திணைக்களம்

**இரண்டாந் தவணைப் பரீட்சை - 2019**

தரம் : 11 | விடைத்தாள் | நாடகமும் அரங்கியலும்

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 11. 1 | 21. 2 | 31. 4 |
| 2. 1 | 12. 2 | 22. 2 | 32. 1 |
| 3. 2 | 13. 1 | 23. 2 | 33. 4 |
| 4. 4 | 14. 4 | 24. 4 | 34. 2 |
| 5. 2 | 15. 3 | 25. 4 | 35. 3 |
| 6. 2 | 16. 4 | 26. 1 | 36. 4 |
| 7. 1 | 17. 1 | 27. 3 | 37. 1 |
| 8. 2 | 18. 3 | 28. 1 | 38. 2 |
| 9. 1 | 19. 3 | 29. 3 | 39. 1 |
| 10. 3 | 20. 4 | 30. 1 | 40. 3 |

(1) 1) ஓவியம்
2) குழந்தை ம.சண்முகலிங்கம், நாடக அரங்கக்கல்லூரி
3) ஆர்மோனியம்
4) நாட்டிய
5) V.V.வைரமுத்து
6) ஆடும்வீடும், நண்டு றால் மீன், சின்னபானை பெரிய பானை
7) காமன் கூத்து
8) கலாநிதி சி.ஜெய்சங்கர்
9) மோதுகை
10) கலாநிதி க. சிதம்பரநாதன்

(2) அ) சபையோர் முன்னிலையில் ஆற்றப்படும் கலைகள்
உ+ம் : நாடகம், இசை, நடனம், வில்லுப்பாட்டு
ஆ) இசை நடனம் நாடகம்

இ)

| நாடகம் | சிற்பம் | ஓவியம் |
|---|---|---|
| கணப்பிரசன்னமானது | அவ்வாறில்லை | அவ்வாறில்லை |
| உயிரோட்டமானது | அவ்வாறில்லை | அவ்வாறில்லை |
| கட்புல செவிப்புலக்கலை | கட்புலக்கலை மட்டும் | கட்புலக்கலை மட்டும் |
| ஆற்றுவோர் பார்ப்போர் நேரடித் தொடர்புடையது | ஆற்றுவோர், பார்ப்போர் நேரடித் தொடர்பற்றது | நேரடித் தொடர்பற்றது |
| நாடகத்தில் நடிகன் பிரதான மூலகம் | அவ்வாறில்லை | அவ்வாறில்லை |

(3) அ) நாடகங்களை மோடி / பாணி அடிப்படையில் யதார்த்தம் யதார்த்தவிரோதம் என வகைப்படுத்த முடியும். மோடிகளுக்கேற்ப நாடகத்தின் கரு, சொல்லாடல், வேட உடை ஒப்பனை, காட்சி விதானிப்பு நடிப்பு என்பன வேறுபடும். யதார்த்த மோடியில் உள்ளதை உள்ளவாறு காட்டும் தன்மை காணப்படுகிறது, யதார்த்த விரோத மோடியில் இவை மோடிமத் தன்மையுடனும் கலைஞனின் கற்பனைக்கு இடமளிக்கும் வகையிலும் அமைந்திருக்கும்.

ஆ) மூடிய தெரிவு, திறந்த தெரிவு, சல்லடைத் தெரிவு

ஈ) நடிகனின் நடிப்பாற்லை விருத்தி செய்வதற்கு அரசங்க விளையாட்டுக்கள் துணை நிற்கின்றன. கற்பனையாற்றல், அவதானம், தொடர்பாடற்திறன், கிரகித்தல், மனனம், உடனடித் தீர்மானம் எடுத்தல் போன்ற காரணங்களுடன் விளக்கம்

(4) அ) எத்தனை துயர் வந்தபோதும் சோர்ந்துவிடாது அதனைச் சவாலாக ஏற்றுத் துணிவோடு முன்னேற வேண்டும்.

ஆ) மயிலி, மாசிவன், மாயன்

இ) மறைக்காடர்:-
ஊர்ப் பெரியவர், ஊர் நிகழ்வுகளில் பங்கு கொள்ளும் பற்றாளர், தனித்தனியே குடும்பங்களின் குறை தீர்ப்பவர். நல்ல மனிதர், நியாயமானவற்றையே சொல்வார் செய்வார்.

ஈ) மீனவ சமுதாயம் பற்றி பேசப்படுகிறது.

(5) அ) மேடை அன்றேல் அரங்க வெளியில் நாடகத்திற்கேற்றவாறு நம்பகத்தன்மையானதோர் சூழலை உருவாக்கல் காட்சி விதானிப்பு

ஆ) நாடகக்கதை, காலம், கரு, மோடி, களம், பண்பாட்டுப்பின்னணி என்பன கவனிக்க வேண்டியவை.

இ) பயன்கள்:- நாடக கதையின் களத்தை வரையறைக்கும், மோடியை சித்தரிக்கும் கருவை அழுத்திக்காட்டும், உணர்விற்கு வலுசேர்க்கும் நாடகச் சூழலுடன் பார்வையாளரை ஒன்றிக்க வைக்கும்.

(6) சிறுகுறிப்பு:-

தயாரிப்பாளர்:- நாடகக் கலைப்படைப்பினை மேடையேற்றுவதற்கான அடிப்படைத் தேவைகளை தோற்றவித்து கலைப் பெறுமானங்களுக்கான சூழலை திட்டமிட்டு முகாமை செய்பவர்.

இசைநாடகம் :- பாடிநடித்தலூடாக கதை சொல்லும் அரங்க வடிவம் இது அனைத்தும் பாடலோடு இணைந்த நடித்தலோடு நிகழ்த்தப் பெறும் பாடல்களிடையே குறைவான உரையாடல் இடம்பெறும். கர்நாடக இசை பிரதானமானது. நடிகரின் சரீரவளம் இனத் மூலதனம். உ+ம் சத்தியவான் சாவித்திரி, வள்ளிதிருமணம், அரிச்சந்திரமயான காண்டம்

நடிகன்:- நாடகத்தின் முதன்மைப் படைப்பாளி நடிகரே.
நாடகத்தின் கட்புலப் பெறுகைக்குக் காரணமானவர் நாடகத்தை செய்கை முறையில் சித்தரிப்பவர் நால்வகைச் சித்தரிப்பூடாக நாடகப் பொருளை பார்ப்பவரிடம் கொண்டு செல்பவர்.

ஆற்றகை வெளி: நாடக நிகழ்ச்சிகள் கட்புலனாக முகிழ்ந்து எழும் இடம் ஆற்றுகை வெளி அது ஓர் அழகியல் வெளி ஆற்றுவோரும் பார்ப்போரும் சங்கமிக்கும் இடம். இது பல வடிவங்களில் இருக்கும். ஆற்றுகை செய்ய, ஆற்றுகையைப் பார்க்க ஏற்றதாக ஆற்றுகை வெளி இருக்க வேண்டும்.

(7 அ) நடிகன்ஒருவனுக்குத் தேவையான பயிற்சிகள் அரங்கப் பயிற்சிகளாகும். இவை பலதரப்பட்டன. உடல் தளர்வு பயிற்சி, குரற்பயிற்சி, சுவாசப்பயிற்சி புலனுணர்வப் பயிற்சி உள ஒருமைப் பாட்டுப் பயிற்சி என்பன.

ஆ) நடிகரது உடலை எத்தகைய சித்தரிப்பிற்கும் ஏற்றதாக்கும் பாத்திர உணர்ச்சிகளை வெளிப்படுத்த உதவும், அரங்கில் தாக்கமான அசைவுகளை மேற்கொள்ள, உணர்ச்சிகளை வெளிப்படுத்த உதவும்.

இ) உடலின் சமநிலையை வலுப்படுத்த உதவும் பயிற்சிகள் உ-ம் ஒற்றைக் காலில் நிற்றல், நுனிக்காலில் இருந்து எழும்புதல். ஒருவர் இன்னொருவரை சுமந்து நடத்தல்.

ஈ) வசனங்களை உரத்துப்பேச, குரலைப்புறத்தெறிய, உணர்ச்சிகளை வெளிப்படுத்திப்பேச, சொல்லாடங்களை ஏற்ற இறக்கத்துடன் பேச, வெவ்வேறு வீச்சுக்களில் பேச உதவும்.